**செய்தி வெளியீடு எண் : 080** **நாள் : 11.01.2024**

# செய்தி வெளியீடு

சென்னை மிக்ஜாம் புயல் வெள்ள நிவாரணப் பணி மேற்கொள்ள தமிழ்நாட்டில் உள்ள பிற நகராட்சி/மாநகராட்சி பணியாளர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டனர். அப்பணிக்காக இராஜபாளையம் நகராட்சியின் துப்புரவு அலுவலர் திரு.த.ஜெயப்பால் மூர்த்தி என்பவர் சென்னைக்கு 05.12.2023 அன்று வரும் போது விக்கிரவாண்டி அருகில் ஏற்பட்ட விபத்தில் காலமனார்.

காலமான பணியாளரின் மனைவிக்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்) நிதியுதவி வழங்கவும் மற்றும் அவரது வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

மேற்படி அறிவிப்பிற்கிணங்க, இராஜபாளையம் நகராட்சியின் துப்புரவு அலுவலர் திரு.த. ஜெயப்பால் மூர்த்தி என்பவரது மகன் திரு. ஜெ.கண்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இராஜபாளையம் நகராட்சியில் பணி ஆய்வாளராக பணி நியமன ஆணை 05.01.2024 அன்று மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம்) அவர்களால் வழங்கப்பட்டது. மேலும், அன்னாரது மனைவி திருமதி.ஜெ.மகேஸ்வரி என்பவருக்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிவாரண தொகையினை மின்னனு பரிவர்த்தனை மூலம் வங்கிக் கணக்குக்கு 10.01.2024 அன்று அனுப்பப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in